**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

# சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பணிப்பாளர் (HM 1-1) - 01 பதவி

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / மனித வள முகாமைத்துவம் / வர்த்தகம் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறேதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பதவிக்கு இயைபான விடயத்துறையில் முதுமாணிப் பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' இயைபுடைய துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

''முகாமைத்துவ'' சேவை வகுதியின் (MM 1-3) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் இயைபான துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் பல்வேறு கடமைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமை தாங்குவதோடு மனித மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமை செய்யும் நிலையான திறமை.

**சம்பள அளவு :** **HM 1-1 - ரூபா (80,295 - 15x2,270 - 114,345)**

**வயதெல்லை : 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.**

### விளையாட்டு அதிகாரி (MA 1-1) - 04 பதவிகள்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**(01) கல்வித் தகைமைகள்:**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்
- i. சிங்களம் / தமிழ்
- ii. கணிதம்
- iii. ஆங்கில மொழி (கடமைப் பொறுப்புகளின் பிரகாரம் தேவையானால் மட்டும்) போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

**(02) மேலதிக தகைமைகள் (தொழில்நுட்ப திறன் / தேர்ச்சி)**

(அ) தேசிய விளையாட்டு கல்வி நிறுவனத்தில் விளையாட்டு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் 03 வருட சேவை அனுபவம் அல்லது தேசிய தொழிற்றிறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத விளையாட்டு முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் அல்லது முப்படையில் உயர் உடற்பயிற்சி ஆலோசகர் கற்கைநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல் / வெளிநாட்டு உடற்பயிற்சி ஆலோசகர் கற்கைநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல் மற்றும் குறைந்தபட்சம் 03 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - திறனற்ற, அரைத் திறனுடைய, திறனுடனான சேவை வகுதிகளில் பின்வரும் (அ), (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆ) க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் முதலாம் மொழி / கணிதம் போன்ற பாடங்கள் இரண்டில் திறமைச் சித்திகளுடன் குறைந்தபட்சம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி :** MA 1-1 ரூபா (27,910 -10x300 -7x350- 4x495 -20x660 - 48,540)

**வயதெல்லை :** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### முகாமைத்துவ உதவியாளர் (MA 1-1) - 06 பதவிகள்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்:**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்
- i. சிங்களம் / தமிழ்
- ii. கணிதம்
- iii. ஆங்கில மொழி (கடமைப் பொறுப்புகளின் பிரகாரம் தேவையானால் மட்டும்) போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்கு விசேடமாகத் தேவைப்படும் ஏனைய தகைமைகள்: (கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பாக மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல்.)

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - திறனற்ற, அரைத் திறனுடைய, திறனுடனான சேவை வகுதிகளில் பின்வரும் (அ), (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் முதலாம் மொழி / கணிதம் போன்ற பாடங்களில் இரண்டில் திறமைச் சித்திகளுடன் குறைந்தபட்சம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பான ஆற்றல் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத் தேர்ச்சியை இயைபுடைய சந்தர்ப்பத்தில் தகைமையொன்றாக சேர்த்துக் கொள்ளலாம்)

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி** : MA 1-1 ரூபா (27,910 -10x300 -7x350- 4x495 -20x660 - 48,540)

**வயதெல்லை :** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### சாரதி (PL 3) - 02 பதவிகள்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தேர்ச்சி:**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான மோட்டார் வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதியொருவராக உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான மோட்டார் வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதியொருவராக உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

ஆரம்ப அரைத் தேர்ச்சி (PL 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியில் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 05 வருட காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனையை பெறாதிருத்தல் வேண்டும். முன்னைய 05 வருட காலத்தினுள் வினைத் திறனை உயர்ந்த மட்டத்தில் பேணியிருத்தல்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி :** PL 3 ரூபா (26,290 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 - 39,490)

**வயதெல்லை :** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### விளையாட்டரங்கு உதவியாளர் (PL 1) - 05 பதவிகள்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**சம்பள அளவு மற்றும் தொகுதி** : PL 1 ரூபா (24,750 - 10x250 - 10x270 - 7x300 - 15x330 - 37,000)

வயதெல்லை : 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
- விண்ணப்பங்களை 2024-07-12ஆம் திகதி அல்லது அதற்கு முன் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.
- உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் தற்போது அரச சேவையிலுள்ளவர்கள் நிறுவனத் தலைவரின் பரிந்துரை சகிதம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**கவனிக்கவும்:** மேற்கூறிய பதவிக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் விதிகளுக்கமைவாக தெரிவு செய்யப்படுவர்.

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**த.பெ. இல. 2211, ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**